2024 ஜூன் 29]

(ஏ) சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகள், மெட்ரோ இரயில் பணிகளால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நடைபெறும் Metro Rail பணிகளால் கடும் போக்குவரத்து நெரிசல் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(ஐ) Foxconn நிறுவனத்தில் திருமணமான பெண்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (மணியடிக்கப்பெற்றது). . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் குற்றச்சாட்டு சொல்லும்போது, அதனுடைய ஆதாரத்தை என்னிடம் தந்துவிட்டு சொல்லியிருக்க வேண்டும்.*

திருமதி வானதி சீனிவாசன்: *இதுதொடர்பாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. வேறு கவன ஈர்ப்பு இருந்தால் சொல்லுங்கள். என் கவனத்திற்குத் தந்தீர்களென்றால், அதற்குரிய ஆதாரம் இல்லாத விஷயங்களைச் சொல்லக் கூடாது. இதை நீக்கிவிடுகிறேன். வேறு ஏதும் கவன ஈர்ப்பு இருந்தால் சொல்லுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *Foxconn நிறுவனத்தில் அங்கு வேலைக்கு எடுக்கக்கூடிய பெண்கள் திருமணமானவர்களாக இருந்தால், அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவது இல்லை. இதுபோன்று அந்த நிறுவனத்தில் நடப்பதாகத் தகவல்கள் வந்ததையொட்டி, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதுகுறித்தும் அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2024 ஜூன் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மட்டும்தான் பதிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள். (குறுக்கீடு)

திருமதி வானதி சீனிவாசன்: **குறித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டைச் சொன்னால், நான் allow பண்ணமாட்டேன். அவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(ஒ) சிவகாசி, தடை செய்யப்பட்ட பட்டாசு ஆலைகள், மீண்டும் இயக்க நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் இன்று காலை 8-15 மணிக்கு Guru Star Fireworks-ல் ஒரு விபத்து நடந்திருக்கிறது. இதுபோன்ற, விபத்துகள் 6 மாதக் காலமாக நடந்துகொண்டிருக்கின்றன. நான் என்ன கவன ஈர்ப்பு கொண்டு வருகிறேன் என்றால், இந்தப் பட்டாசு நிர்வாகம் ஒரு தலைமையின்கீழ் நடைபெறவேண்டும். முன்பு, 2003, 2005 ஆம் ஆண்டுகளில் Explosives Department-தான் பார்த்துக் கொண்டிருந்தது. கடந்த 15 ஆண்டுக் காலமாக பார்த்தீர்களென்றால், Police Department, Revenue Department and Labour Department என இந்த மூன்று department-களும் சேர்ந்து வருவதால், நிறைய factory-கள் இன்றைக்கு suspend ஆகியிருக்கின்றன. கிட்டதட்ட 300 factories suspend ஆகியிருப்பதால், ஆயிரத்திலிருந்து இரண்டாயிரம் workers வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இந்த வேலை இல்லாமல் இருக்கிற workers அடுத்த factory-ல் போய் வேலை செய்வதால்தான், இதுமாதிரி விபத்துகள் மாறிமாறி நடக்கின்றன. 100 பேர் வேலை பார்க்க வேண்டிய இடத்தில், 150 பேர், 200 பேர் உள்ளதால் விபத்துகள் அதிகமாக இருக்கின்றன. இந்த company-ல் இருக்கிற system வேறு; மற்ற company-களில் இருக்கிற system வேறு; இதனால்தான் விபத்துகள் அடிக்கடி நடக்கின்றன. இதுபோன்ற விபத்துகள் நடந்து, suspend செய்த factory-களை. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.